# மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி, (தன்னாட்சி)

## தஞ்சாவூர் – 5.

*எண்: 35/2018 - 2019*                                                    *18.01.2019*

## <u>சுற்றறிக்கை</u>

ஏப்ரல் 2019-ல் நடைபெற உள்ள இரண்டாம், நான்காம் மற்றும் ஆறாம் பருவத் தேர்விற்கான தேர்வுக் கட்டணத்தை எதிர்வரும் 07.02.2019 முதல் 12.02.2019 வரை அந்தந்த வகுப்புகளுக்கு குறிப்பிட்டுள்ள நாட்களில் காலை 10.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை அறை எண்: 28ல் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ***07.02.2019*** | (வியாழன்) | முதுநிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு |
| ***08.02.2019*** | (வெள்ளி) | இளநிலை முதலாம் ஆண்டு |
| ***11.02.2019*** | (திங்கள்) | இளநிலை இரண்டாம் ஆண்டு |
| ***12.02.2019*** | (செவ்வாய்) | இளநிலை மூன்றாம் ஆண்டு |

மேற்கண்ட தேதிகளில் கட்டணம் செலுத்தத் தவறியவர்கள் 25.02.2019 (திங்கட் கிழமை) அன்று ஒரு நாள் மட்டும் ரூ.300/- அபராதத் தொகையுடன் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். எக்காரணம் முன்னிட்டும் **25.02.2019** க்குப் பிறகு **தேர்வுக் கட்டணம் செலுத்த அனுமதிக்க இயலாது** என்றும் அறிவிக்கப்படுகிறது.

கல்வி உதவித்தொகை விண்ணப்பித்துள்ள SC / ST / SCC பிரிவை சார்ந்த அனைத்து வகுப்பு மாணவர்களும் பிற பிரிவு மாணவர்களைப் போல் **தேர்வுக்கட்டணம் செலுத்ததுவதற்கான விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து,** தேர்ச்சி பெறாத **<u>நிலுவைத்தாள்களுக்கு மட்டும்</u>** தேர்வுக் கட்டணம் உரிய நாட்களில் கட்டாயம் செலுத்திட வேண்டும்.

மாணவர்கள் அன்றைய தினம் செலுத்தும் தொகையை மட்டும் வங்கி செலுத்துச்சீட்டி(Challan)-ல் குறித்திட வேண்டும்.

SC / ST / SCC உதவித் தொகை பெறும் மாணவர்கள் இதுவரை செலுத்தாத தேர்வுக் கட்டணத்தை கல்லூரி கல்வி இயக்குனரின் வழிகாட்டுதலின் படி கல்வி உதவித் தொகை அரசிடமிருந்து பெற்ற பின்னர் **பருவத் தேர்வு அனுமதி சீட்டுப் பெறுவதற்கு முன்னர், தேர்வு நெறியாளர்** அலுவலகத்தில் செலுத்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அகமதிப்பீட்டில் தேர்ச்சிப் பெறாதவர்கள், அகமதிப்பீட்டு படிவம் பெற்று மேற்குறிப்பிட்டுள்ள தேதிகளிலேயே தாள் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் கட்டணம் செலுத்த வேண்டுமெனவும் அறிவிக்கலாகிறது.

18/01/19
**தேர்வு நெறியாளர்**

தேர்வு நெறியாளர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.

**முதல்வர்** 18/1/19

முதல்வர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.